**கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபை - 2023**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச சபையின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை

தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

### 1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பிரதேச சபை நூலகக் கட்டிடத்தின் மேல்மாடியின் கைவேலி நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 32,800 இற்கான செலவு மூலதனப்படுத்தியிருக்கவில்லை. | சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | பிரதேச சபை கட்டிடத்தின் மேல்மாடியின் திருத்த வேலைகளுக்காக பெற வேண்டியிருந்த மற்றும் செலுத்த வேண்டியிருந்த ரூபா 43,742 தொகைக்காக முறையே கடன்பட்டோர் | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | மற்றும் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் கணக்கீடு செய்திருக்கவில்லை. | | |
| (இ) | 4 வருமானத் தலைப்புகளுக்கான முற்பெறுவனவு ரூபா 45,767 தொகை மற்றும் 4 வருமானத் தலைப்புகளுக்காக மிகைக் கட்டணம் என சிட்டையிடப்பட்டிருந்த ரூபா 98,495 தொகை உரிய வருமானத் தலைப்புக்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு மே மாதம் முதல் திசெம்பர் மாதம் வரையான காலப் பகுதி தொடர்பாக பெற வேண்டிய முத்திரைக் கட்டணத்திற்காக மற்றும் இலவச புகையிரத அனுமதிப் பத்திரத்திற்காக புகையிரதத் திணைக்களத்திற்கு செலுத்த வேண்டிய ரூபா 38,600 தொகைக்காக ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | முத்திரைக் கட்டணங்கள் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என மற்றும் மீளாய்வாண்டு இறுதியளவில் உள்ள புகையிரத அனுமதிப் பத்திரக் கட்டண எண்ணிக்கையை அறிந்திருக்காமையால் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படவில்லை என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | ரூபா 154,749 இற்கான 59 பொருட் பதிவேட்டு பண்ட விடயங்கள் ஆதனங்கள் பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரி செய்வதற்கநடவடிக்கை எடுக்கப்படும் என. | சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 64,017,172 தொகைக்கான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மீதியை திருப்திகரமாக பரிசோதனை செய்ய முடியாதிருந்தது. | இணங்குகின்றேன் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி 2023 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 6,567,491 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த மீண்டுவரும் செலவு ரூபா 4,683,492 தொகையாக இருந்தது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

| | வருமான மூலம் | 2023 மதிப்பீட்டு வருமானம் | 2023 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2023 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | 2022 மதிப்பீட்டு வருமானம் | 2022 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2022 சேகரிக்கப்பட்ட வருமானம் | 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i. | வீதவரி மற்றும் வரி | 1,661,562 | 1,661,155 | 1,810,035 | 660,079 | 1,025,485 | 922,123 | 828,320 | 808,959 |
| ii. | வாடகை | 6,394,400 | 3,858,035 | 3,810,403 | 424,130 | 4,915,200 | 1,643,740 | 1,643,524 | 376,498 |
| iii. | அனுமதிப் பத்திரக் கட்டணம் | 285,060 | 270,561 | 272,961 | 35,925 | 330,100 | 484,510 | 543,360 | 38,325 |
| iv. | ஏனைய வருமானங்கள் | 1,638,500 | 3,845,936 | 3,845,936 | - | 1,678,200 | - | - | - |
| | மொத்தம் | 9,979,522 | 9,635,687 | 9,739,335 | 1,120,134 | 7,948,985 | 3,050,373 | 3,015,204 | 1,223,782 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு நிலுவை வீதவரி மீதி ரூபா 808,959 தொகையாகக் காணப்பட்டதுடன், 565 வீதவரி அலகுகள் தொடர்பாக சிட்டையிடல் ரூபா 1,661,155 தொகையுடன் ரூபா 2,470,114 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. ஆண்டின் போது மொத்த அறவீடு ரூபா 1,810,035 தொகையாகக் காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு உள்ளவாறு 161 வீதவரி அலகுகள் தொடர்பாக ரூபா 660,079 இற்கான நிலுவை மீதியொன்று காணப்பட்டது. | 2024 மார்ச் 31 திகதியளவில் இந்த நிலுவை மீதியில் ரூபா 145,616 தொகை அறவிடப்பட்டுள்ளதுடன் மீதி நிலுவைத் தொகையையும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை மீதி காணப்பட்ட 17 கடையறைகளில் 06 கடையறைகள் தொடர்பாக ரூபா 10,000 இற்கு மிகையான நிலுவை மீதி காணப்பட்டதுடன் அது மொத்த | 2024 மார்ச் இறுதியளவில் ரூபா 36,490 தொகை அறவீடு செய்த பின்னர் ரூபா 126,834 இற்கான நிலுவை ஒன்று அறவிடப்பட வேண்டிக் காணப்பட்டது. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நிலுவை கடையறை எண்ணிக்கையில் 35 சதவீதமாகக் காணப்பட்டது. | | |
| (இ) மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் முத்திரைக் கட்டணம் என ரூபா 1,276,947 தொகை பெற வேண்டியிருந்தது. | 2024 மார்ச் 31 திகதியளவில் ரூபா 1,276,000 இற்கான தொகையொன்று கிடைத்திருந்தது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சட்டத்தின் மூலம் சாட்டப்பட்டுள்ள கருமங்கள் நிறைவேற்றுதல்**

பிரதேச சபை அதிகாரச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்துதல் மற்றும் நிருவகித்தல் பொது மக்களின் சுகபோகம், வசதி மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டிய பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நாளாந்தம் சேகரமாகும் 1500 கிலோகிராம் குப்பைகளில் இருந்து 800 கிலோகிராமிற்கு அண்மித்த எண்ணிக்கையொன்று குப்பை சேதனப் பசளை உற்பத்தி செய்முறைக்காக பயன்படுத்தப்படுவதுடன் கணக்காய்வுத் திகதியாகிய 2023 ஒக்தோபர் 26 திகதியளவில் குப்பை கிலோகிராம்கள் 240,000 அண்மித்த தொகையொன்று சேகரிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த காலப் பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டிருந்த சேதனப் பசளை இருப்பு 9,670 கிலோகிராம்களாகக் காணப்பட்டது. அதன் படி சேதனப் பசளை உற்பத்திக்காக பயன்படுத்தக் கூடிய குப்பையின் எண்ணிக்கைக்கு ஒப்பாக சேதனப் பசளை உற்பத்தி 4.03 சதவீத அளவிலான குறைந்த மட்டத்தில் காணப்பட்டது. | அரச உரக் கொள்கையின் படி சேதனப் பசளை விற்பனை அதிகரித்தல் மற்றும் குறைவடைதல் மேற்கொள்ளப்படுவதுடன், உரத்தை அரித்து குவித்து வைக்கப்படாததுடன் கிடைக்கக் கூடிய கட்டளைகளின் படி உரம் தயாரிக்கப்பட்டு வழங்கப்படுகின்றது என. | முறையான குப்பை முகாமைத்துவத் திட்டமொன்று கடைபிடிக்கப்பட வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 10(6) இணங்க 2016 முதல் 2020 வரையான காலப் பகுதியில் அங்கீகரிக்கப்பட்டிருந்த 153 கட்டிட விண்ணப்பங்களுக்காக அபிவிருத்தி அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டு 3 வருடங்களுக்கும் 7 இற்கும் காலம் வருடங்கள் கடந்திருந்த போதிலும் | எதிர்காலத்தில் குறிப்பிட்ட கட்டிடங்களின் உரிமையாளர்களை அறிவுறுத்தி இணக்கச் சான்றிதழ் வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அவற்றில் 57 கட்டிடங்களுக்காக மாத்திரம் இணக்கச் சான்றிதழ் பெற்றுக் கொண்டிருந்தது. | | |
| (ஆ) | 2019 ஆண்டு பிரதேச சபையின் அங்கீகாரமின்றி முறைசாரா விதமாக செயற்படுத்தப்பட்டிருந்த உதாகம்மான வீடமைப்பு செயற்திட்டம் தொடர்பாக 1982 இன் 4 ஆம் இலக்கம் மற்றும் 1984 இன் 44 ஆம் இலக்கம் ஆகிய சட்டங்களின் மூலம் திருத்தப்பட்டிருந்த 1978 இன் 41 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சட்டத்தின் மூலம் சபைக்கு சாட்டப்பட்டிருந்த அதிகாரம் மற்றும் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிசாரச் சட்டத்தின் பிரிவு 52 இன் ஏற்பாடுகளுக்கு இணங்க அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை அகற்றுவதற்காக சபையினால் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | எதிர்காலத்தில் இந்த அங்கீகாரமற்ற நிர்மாண வேலைகளை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது என. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |

**3.3 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 சபிரி கிராமம் ஒன்று மக்கள் பங்களிப்பு கிராமிய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் மற்றும் 2020 கிராமிய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வேலைத் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டிருந்த கொங்கிரீட் பக்க வடிகால் பக்கச்சுவர் மற்றும் மதகுகள் நிர்மாணிக்கும் 09 நிர்மாண வேலைகளுக்காக கொங்கிரீட் சுவர்கள் நிர்மாணிக்கும் போது அடிப்படையை தயாரிப்பதற்காக வடிகால்கள் வெட்டும் வேலை விடயம் தொடர்பாக மதிப்பீடு தயாரிக்கும் போது தென்மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் 2019 முதல் அரையாண்டிற்கான DR-005A கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 664.22 ரேட்டுக்கு பதிலாக E1-003 இன் கீழ் அறிமுகப்படுத்தியிருந்த ரூபா 1,108.30 ரேட் பயன்படுத்தப்பட்டிருந்தமையால் ஒரு கனமீற்றர் மண்ணிற்காக ரூபா 444.08 வீதம் 324 கனமீற்றர்களுக்காக ரூபா 143,882 தொகை மிகையாக ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் மதிப்பீடுகள் தயாரிக்கும் போது மற்றும் பில் பத்திரங்களுக்காக கொடுப்பனவு செய்யும் போது குறிப்பிட்ட நிறுவனங்களில் இருந்து விலை பகுப்பாய்வுகள் பெற்றுக் கொண்டு அது தொடர்பாக கவனம் செலுத்தி நடவடிக்கை எடுக்கப்படும் என. | உரிய ரேட்கள் பயன்படுத்தப்பட வேண்டும். |